**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மதுராந்தகம்**

முன்னிலை : செல்வி. பா.பவ்யா, **B.A, L.L.B.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மதுராந்தகம்

2026 ஆம் ஆண்டு ஜீன் 25–ம் நாள் வியாழன்கிழமை

2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம் ஆனி திங்கள் 11–ம் நாள்

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்: 95/2026

அரசுக்காக.
காவல் உதவி ஆய்வாளர்,
அச்சிறுப்பாக்கம் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்.286/2025 ........ குற்றமுறையிடுபவர்

– எதிர் –

A1–ரங்கைய்யன், வயது 36, த/பெ.துரைகண்ணு,
நடுத் தெரு,
சூனாம்பேடு கிராமம் (ம) அஞ்சல்,
செய்யூர் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

A2– கலையரசன் வயது.27 த/பெ.ராஜாமணி.
ஏரி தெரு,
சூனாம்பேடு கிராமம் (ம) அஞ்சல்,
செய்யூர் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

........ எதிரிகள்

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. II, Madurantakam. |
| 2. | Name of the Judge | Selvi. B.Bavya, , B.A., L.L.B., |
| 3. | Date of Judgment | 25.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC. 95/2026<br>TNCG15-000325-2026 |
| 5. | Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, Acharapakkam PS.<br>**Complainant** |
| | | A1–ரங்கைய்யன், த/பெ.துரைகண்ணு,<br>A2–கலையரசன், த/பெ.ராஜாமணி.<br>**Accused** |
| 6. | Date of Occurrence | 14.08.2025 |
| 7. | Date of Complaint | 15.08.2025 |

<table>
<tr><td>8.</td><td>Date of Arrest if any and remand</td><td>A1 arrested on 12.11.2025</td></tr>
<tr><td>9.</td><td>Period of Remand of the Accused</td><td>-----</td></tr>
<tr><td>10.</td><td>Date of release on bail</td><td>A1 released on 17.11.2025</td></tr>
<tr><td>11.</td><td>Date of Final Report</td><td>30.12.2025</td></tr>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to the Court of Sessions</td><td>-------</td></tr>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused U/s. 316 Bharatiya Nagarik Suraksha Sanhita</td><td>10.04.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and Cross Examination of the Witnesses</td><td><table>
<tr><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>03.03.2026</td><td>03.03.2026</td></tr>
<tr><td>PW2</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
<tr><td>PW3</td><td>16.06.2026</td><td>16.06.2026</td></tr>
<tr><td>PW4</td><td>16.06.2026</td><td>16.06.2026</td></tr>
<tr><td>PW5</td><td>16.06.2026</td><td>16.06.2026</td></tr>
<tr><td>PW6</td><td>18.06.2026</td><td>18.06.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 355 BNSS</td><td>------</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused U/s.351 of BNSS Act</td><td>23.06.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance / production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior Courts and the results there of</td><td>------</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>10.04.2026</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>25.06.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>25.06.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td>------</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give Explanation</td><td>------</td></tr>
</table>

****

இவ்வழக்கானது 17.02.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண் 95/2026 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 25.06.2026–ஆம் தேதியன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.புனிதராஜன் அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று

நடத்திய இவ்வழக்கில் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**1.** இவ்வழக்கானது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 296(b), 115(2), 351(2) r/w 4 of TNPHW Act–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதை கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**குற்றமுறையீட்டின் சுருக்கம்:**

**2. இவ்வழக்கின் சாட்சி–1 இலக்கியா என்பவரின் கணவர் சாட்சி–2 சக்திதாசன் என்பவருக்கு 1ம் எதிரியான ரங்கைய்யன் என்பவர் 12.11.2025ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் போன் செய்து உன்னை காவல் துறையினர் தேடுவதாக கூறியபோது சாட்சி–2 தான் எந்த தவறும் செய்யவில்லை என்றும், காவல் துறையினர் வந்தால் தான் விசாரணைக்கு செல்வதாக கூறியபோது 1ம் எதிரி சாட்சி–2க்கு போன் மூலம் மிரட்டல் விடுத்து கடந்த 12.11.2025ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் பருக்கல் கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள சாட்சி–2 அவரது வீட்டினுள் இருந்தபோது 1ம் எதிரி மற்றும் 2ம் எதிரி கலையரசன் இருவரும் சாட்சி–2ன் வீட்டினுள் நுழைந்து சாட்சி–2ஐ கையால் அடித்தும், காலால் உதைத்துள்ளனர் அதை தடுக்க சென்ற சாட்சி–1ஐ ஒரு பெண் என்றும் பாராமல் 2ம் எதிரியானவர் தெவடியா நீ வாடி என்று கூறி கையால் அடித்து நைட்டியை பிடித்து கிழித்து குற்றம் புரிந்துள்ளார்.** எனவே, எதிரிகள் பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 296(b), 115(2), 351(2) r/w 4 of TNPHW Act–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றமுறையிடுபவர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கினை 17.02.2026ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டு எதிரிகள் ஆஜரானதன் பேரில் பிரிவு 230 BNSS–ன் கீழ் குற்றப்பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய

கால அவகாசத்திற்கு பின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், 1ம் எதிரி பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 296(b), 115(2) r/w 4 of TNPHW Act–ன் கீழும், 2ம் எதிரி பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 115(2)–ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

**அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:**

**5.** அரசு தரப்பில், அ.சா.1 இலக்கியா என்பவர் அவரது சாட்சியத்தில் தான் தற்போது பருக்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், 2025ம் வருடம் நவம்பர் மாதத்தில் ஒரு நாள் ஆஜர் எதிரி ரங்கன் தன் கணவருக்கு போன் செய்து போலிஸ் அவரை தேடுவதாக கூறியதாக தன் கணவர் தன்னிடம் கூறினார் என்றும், தான் இது சம்மந்தமாக அச்சிறுப்பாக்கம் காவல் நிலையத்தில் தான் புகார் கொடுத்தேன் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து வரும், அ.சா.6 நாராயணமூர்த்தி என்பவர் தனது சாட்சியத்தில் அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் 2025ம் வருடம் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த தியாகராஜன் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை பற்றி நன்கு தெரியும் என்பதாலும், அவர் பணியிட மாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 12.11.2025ம் தேதி மதியம் 01.00 மணிக்கு இலக்கியா என்பவர் நிலையம் ஆஜராகி அளித்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 286/2025 BNS பிரிவுகள் 329(4), 296(b), 115(2), 351(2) and r/w 4 TNPHW Actன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் 12.11.2025 ஆம் தேதி மதியம் 2.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சத்தியதாஸ் மற்றும் மைக்கேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை தேடிவந்த நிலையில் 1ம் எதிரி ரங்கையன் என்பவரை 12.11.2025 ம் தேதி மாலை 4.00 மணிக்கு அச்சிறுப்பாக்கம் காவல் நிலையம் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், 2ம் எதிரியை கைது செய்யவில்லை என்றும், இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது BNS பிரிவுகள் 329(4), 296(b), 115(2), 351(2) and r/w 4 TNPHW Act பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் 351(1)(ஆ)BNSS–ன் கீழ் வினவிய போது எதிரிகள் அதனை மறுத்து கூறினார். எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**8.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் அரசு தரப்பில் 1ம் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 296(b), 115(2) r/w 4 of TNPHW Act–ன் கீழும், 2ம் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 115(2)–ன் கீழான கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**தீர்வு :–**

**9.** பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 104 ன் படி எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சேர்ந்ததாகும். இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கபட்டு அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யபட்டுள்ளன. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. தற்போது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் 1ம் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 296(b), 115(2) r/w 4 of TNPHW Act–ன் கீழும், 2ம் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 115(2)–ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்களின் மூலம் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதே ஆகும்.

**10.** அ.சா.1 இலக்கியா என்பவர் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் அ.சா.ஆ.1யைப் பரிசீலக்கையில் 12.11.2025ம் காலை சுமார் 07.00 மணியளவில் தனது கணவரின் தொலைபேசிக்கு சூனாம்பேடு கிராமத்தைச் சார்ந்த ரங்கையன் என்பவர் போன் செய்து, தனது கணவரை காவல் துறையினர் தேடுகிறார்கள் என்று கூறினார் அதற்கு தன் கணவர் தான் எந்த தவறும் செய்யவில்லை காவல்துறையினர் வந்தால் தான் விசாரணைக்கு செல்கிறேன் என்று கூறினார் என்றும், அப்பொழுது தனது கணவரை மேற்கண்ட நபர் தொலைபேசி மூலமாக மிரட்டல் விடுத்தார் என்றும், இந்நிலையில் 12.11.2025ம் தேதி சுமார் 10:30 மணியில் எனது கணவர் வீட்டில் உள்ளே இருக்கும் போது மேற்கண்ட நபர் பெயர்

தெரியாத ஒரு நபருடன் சேர்ந்து கொண்டு தனது கணவர் கழுத்தை நெரித்தும் அடித்தும் உதைத்தனர் உடனே தன் கணவர் சத்தம் போட்டவுடன் தான் உள்ளே சென்று தடுத்தபோது மேற்கண்ட ரங்கையன் என்பவர் தன்னை பார்த்து "தெவிடியா நீ வாடி" என்று கூறி தனது நைட்டியை பிடித்து கிழித்து தன்னை கைகளால் அடித்தாகவும், தங்கள் வீட்டின் அருகில் இருந்தவர்கள் வந்ததும், மேற்கண்ட இரண்டு நபர்களும் ஓடிவிட்டதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

**11.** அ.சா.1 இலக்கியா என்பவர் அவரது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் தேதி ஞாபகம் இல்லை என்றும் கடந்த 2025 ஆம் வருடம் நவம்பர் மாதத்தில் ஒரு நாள் ஆஜர் எதிரி ரங்கன் என்பவர் தன் கணவருக்கு போன் செய்து போலீஸ் அவரைத் தேடுவதாக கூறியதாக தன் கணவர் தன்னிடம் கூறினார் என்றும் இது சம்பந்தமாக அச்சிறுப்பாக்கம் காவல் நிலையத்தில் தான் புகார் கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12.** மேலும், அ.சா.1யை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்த பொழுது அ.சா.1 தாங்கள் வீட்டில் இருந்த பொழுது ஆஜர் எதிரிகள் தன் கணவரை அசிங்கமாகப் பேசி அடித்தார்களா என்ற கேட்டப் பொழுது ஆமாம் என்று கூறியுள்ளார். மேலும், அவர் கொடுத்த புகார் அ.சா.ஆ.1ல் ஆஜர் எதிரிகள் வீட்டிற்குள் நுழைந்து அவரது கணவரை அசிங்கமாக பேசியதாக குறிபிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் எதிரிகள் அவரது கணவரின் உடலில் எந்த பாகத்தில் எவ்வாறு தாக்கினர்கள் என்று சாட்சியம் அளிக்கவில்லை.

**13.** மேலும், அவர் எதிரி ரங்கையன் என்பவர் தன்னை அசிங்கமாக பேசி தனது நைட்டியைப் பிடித்து இழுத்து அடித்தாக கூறியுள்ளார். ஆனால், அரசு தரப்பின் குறுக்கு விசாரணையின் பொழுது, ஆஜர் எதிரிகள் இருவரும் தன்னை அசிங்கமாகப் பேசி நைட்டியைப் பிடித்து கிழித்து தன்னை கைகளால் அடித்தார்கள் என்றால் ஆமாம்

என்று முரண்பட்டு கூறியுள்ளார். மேலும், இவ்வழக்கில் எதிரி அ.சா.1 அணிந்திருந்த நைட்டியைக் கிழித்ததாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி கிழிந்த ஆடை எதுவும் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை.

**14.** இவ்வழக்கில் காயமுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 சக்திதாசன் என்பவர் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் திருவிழாவின் பொழுது, தான் மது குடித்துக் கொண்டிருந்த பொழுது, தனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடைய வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அது சம்மந்தமாக புகார் கொடுத்தாகதாக அ.சா.1–ன் சாட்சியம் மற்றும் புகாருக்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அவர் எதிரிகள் அவரது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, அவரை தாக்கியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. அரசு தரப்பில் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அனுமதிக்கப்பட்ட பொழுது எந்தவித முரண்பாடும் வெளிக்கொணரப்படவில்லை. எனவே, மேற்கண்ட காரணங்களால் அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.1 புகாரில் உள்ள சங்கதிகள் மீதான நியாயமான சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது.

**15.** கேள்வியுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 ஷாருக்கான் என்பவர் அவரது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியாது என்றும், வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனக்கூறி அரசு தரப்பில் இருந்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**16.** பார்வை மகசர் சாட்சியாக அ.சா.4 சத்தியதாஸ் மற்றும் அ.சா.5 மைக்கேல் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.4 சத்தியதாஸ் என்பவர் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் தன்னுடைய அல்ல என்றும், வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று கூறி அரசு தரப்பில் இருந்து பிறழ் சாட்சியும் அளித்துள்ளார். மைக்கேல் என்பவர் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் போலீசார் தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும், அதில் தான் கையொப்பம் செய்ததாகவும், வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என அரசு தரப்பில் இருந்து பிறழ்ந்து பிறழ் சாட்சியம்

அளித்துள்ளார். அவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது தான் கையொப்பத்தை வெள்ளை தலையில் செய்தேனோ அல்லது எழுதப்பட்டிருந்த தாளில் செய்தேன் என்றால் வெள்ளைத் தாளில் செய்தேன் என்று கூறியள்ளார். எனவே, இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 நம்பகத்தன்மை குறித்த நியாயமான சந்தேகம் என் நீதிமன்றத்திற்கு எழுகிறது.

**17.** மேலும், அரசு தரப்பில் முன்னிருத்தபட்ட அ.சா.**1** மற்றும் அ.சா.**2** எதிரிகளுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359(3) BNSS–ன் கீழ் மனுதாக்கல் செய்த மனு C.M.P.NO.621/2026–ல் கோப்பிற்கு எடுக்கபட்டதில் இவ்வழக்கின் குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யபட்டுள்ளது.

**18.** இவ்வழக்கில் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக தாக்கல் செய்த மனுவை வைத்து பார்க்கும் போது, மாண்புமிகு உச்சநீதிமன்றம் Central Bureau of Investigations Vs Sadhu Ram Singh Reported in 2017(1) MLJ Crl724 SC என்ற வழக்கில் Continuance of Criminal Proceedings after compromise has been arrived between complainant and accused, would amount to abuse of process of court and futility – Trial would be prolonged and it may end in which may be of no consequence to any parties என்று கூறியுள்ளதை கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. இந்த முன் தீர்ப்பின் அடிப்படையில் இருதரப்பினரும் சமாதானமாக சென்ற நிலையில் இவ்வழக்கினை தொடர்வது அனாவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**19.** மேலும், இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.**1** மற்றும் காயமுற்ற சாட்சி அ.சா.**2** ஆகியோர் ஒருவருக்கு ஒருவர் ஒத்துரைத்து சாட்சியம் அளிக்காத நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.தியாகராஜன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன்விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது

குறித்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.6 நாராயணமூர்த்தி என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**20.** மேற்கண்ட முரண்பாடுகளால், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் அரசு தரப்பு சான்றாவணங்களையும் ஒப்பிட்டு பரிசீலித்து பார்க்கும் போது, புகாரில் கண்டுள்ள சங்கதிகளை ஒத்து வலியுறுத்தி எதிரிகள் இருவரும் சேர்ந்து அ.சா.2ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அ.சா.2ன் கழுத்தை கையால் நெரித்து அடித்து உதைத்தாகவோ அ.சா.1ஐ பொது இடத்தில் வைத்து மற்றவர்கள் முன்னிலையில் அருவருக்கத்தக்க வகையில் 1ம் எதிரி ஆபாசமான வார்த்தைகளை மொழிந்ததாகவோ, 1ம் எதிரி அ.சா.1ன் நைட்டியை கிழித்து அவரது பெண்மையை இழிவுப்படுத்தியதாகவோ சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே, 1ம் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 296(b), 115(2) r/w 4 of TNPHW Act–ன் கீழும், 2ம் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 115(2)–ன் கீழான கூறுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**21.** எனவே முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையிலும், இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் 1ம் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 296(b), 115(2) r/w 4 of TNPHW Act–ன் கீழும், 2ம் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 329(4), 115(2)–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**22.** இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எனவே, அதுகுறித்து எந்தவித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

**23.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்த போது எதிரிகள் பிணையில் சென்றிருந்தால், மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 25-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BAVYA BALU
Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.06.25 15:46:46 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.

<u>அரசு தரப்புச் சாட்சிகள்:</u>

| | |
|---|---|
| அ.சா.1 | இலக்கியா, க/பெ.சக்திதாசன் |
| அ.சா.2 | தியாகராஜன் த/பெ.முருகன் |
| அ.சா.3 | ஷாருக்கான் த/பெ.ஆனந்தன் |
| அ.சா.4 | சத்தியதாஸ் த/பெ.சேகர் |
| அ.சா.5 | மைக்கேல் த/பெ.அய்யாவு |
| அ.சா.6 | நாராயணமூர்த்தி த/பெ.பாண்டுரங்கன் |

<u>அரசு தரப்புச் சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.1ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.2 | பார்வை மகசரில் உள்ள அ.சா.5ன் இரண்டாவது கையொப்பம் | அ.சா.5ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் | அ.சா.6ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.6ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

<u>அரசு தரப்புச் சான்றுப்பொருள் :</u> **இல்லை.**

<u>**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:**</u> **இல்லை.**

<u>குறிப்பு:</u>

1. சாட்சிகள் யாரும் விசாரணைக் காலத்தில் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. விசாரணைக் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தனர்.

3. காவல் துறையினருக்கு நடவடிக்கைச்சீட்டு வழங்கப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.06.25 15:46:53 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மதுராந்தகம்.**